*அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை : 22/2020*

*எனது இலக்கம்:EST-6/04/LON/0202*
*பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்*
*உள்ளூராட்சி அமைச்சு*
*சுதந்திர சதுக்கம்*
*கொழும்பு 07.*

*2020.12.16*

*அமைச்சுக்களின் செயலாளர்கள்*
*இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்*
*மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்*
*திணைக்களத் தலைவர்கள்*

## குறைநிரப்பு விழாக்கால கடன் திட்டம்

*நத்தார் மற்றும் புது வருடப் பிறப்புடன் ஆரம்பிக்கும் விழாக் காலத்தை முன்னிட்டு அரசாங்க ஊழியர்களுக்கு 0.625% மாதாந்த வட்டிக்கு 10 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டுமென்ற நிபந்தனைக்கு உட்பட்ட வகையில் குறைநிரப்பு விழாக் கால கடன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிமேதகு சனாதிபதியின் பணிப்புரைக்கு இணங்க அரசாங்க வங்கிகளின் தலைவர்களுக்கும் அறிவூட்டி சனாதிபதி செயலாளரினால் அவரின் 2020.12.15 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் எனக்கு அறிவுறுத்துள்ளார்.*

*02. மேற்படி பணிப்புரைக்கு இணங்க வழங்கப்படும் குறைநிரப்பு விழாக்காலக் கடன் பின்வருமாறு மூன்று வகுதிகளைக் கொண்டிருக்கும்.*

- *(அ) மாதாந்தம் ரூபா 50,000/- அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளம் பெறும் ஊழியர்கள் ரூபா 50,000/- கடன் தொகை*
- *(ஆ) மாதாந்தம் ரூபா 25,000/- இற்கு மேற்பட்ட எனினும் ரூபா 50,000/- இற்கு குறைந்த சம்பளம் பெறும் ஊழியர்கள் ரூபா 25,000/- கடன் தொகை*
- *(இ) மாதாந்தம் ரூபா 25,000/- இற்கு குறைந்த சம்பளம் பெறும் ஊழியர்கள் ரூபா 10,000/- கடன் தொகை*

*03. அரசாங்க ஊழியர்கள் இந்த குறைநிரப்புக் கடனைப் பெற்றுக்கொள்வதை இலகுபடுத்துதற்காக அனைத்து நிறுவனங்களினதும் தலைவர்கள் தமது நிறுவனங்களின் ஊழியர்களின் சான்றுப்படுத்திய பெயர்ப் பட்டியல்களை தமது சேவை நிலையத்திற்கு அண்மையிலுள்ள அரசாங்க வங்கியொள்றுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அப்போது குறித்த வங்கியினால் கேட்கப்படும் குறைநிரப்புக் கடன் தொகை ஊழியர்களின் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்படும்.*

*04. மேலே 03 ஆம் பந்திக்கு இணங்க வழங்கப்படும் கடன்களையும் அவற்றுக்கான வட்டிகளையும் நிறுவனத் தலைவர்கள் 2021 ஜனவரி மாதம் முதல் ஒக்டோபர் 31 ஆம் திகதி வரையான 10 மாத காலத்தினுள் ஊழியர்களின் சம்பளத்திலிருந்து சம தவணைகளாக அறவிட்டு கடன் வழங்கிய வங்கிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*05. இந்த குறைநிரப்பு விழாக் காலக் கடன்களை விரைவாக வழங்குவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்யுமாறு இத்தால் அறியத் தருகின்றேன்.*

*ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி*
*செயலாளர்*
*பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்*
*உள்ளூராட்சி அமைச்சு*